வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 2735 / அ2/2021 நாள் 29.06.2022

பொருள் மெட்ரிகுலேசன் பள்ளிகள் – வேலூர் மாவட்டம் – தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் – கோவிட் -19 கொரோனா தீ நுண்மி காரணமாக குழந்தைகளின் பெற்றோர்கள் இறப்பு – சார்பான விவரம் அனுப்பப்பட்ட மாணவர்கள் மற்றும் கீழ்க்காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்ற கோருதல் - தொடர்பாக

பார்வை

1. பிற்சேர்கை அரசாணை எண் 24 சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை (S.W.5 (1) } த்துறை நாள் 11.06.2021
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 15.09.2021

பார்வை 2-ல் காணும் கடித செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு, வேலூர் மாவட்டத்தில் உள்ள மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அடிப்படை உரிமையை உறுதி செய்தல், ஆதரவற்ற அல்லது பெற்றோர்களில் ஒருவரையோ அல்லது இருவரையுமே இழந்த குழந்தைகளைக் கையாள்வதற்கான பரிந்துரைகளின் படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள மெட்ரிக்/ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களின் விவரம் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் மெட்ரிக் பள்ளிகள் இயக்ககத்திற்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டது.

பார்வை 1- ல் காணும் பிற்சேர்கை அரசாணையின் படி, கோவிட் -19 தீ நுண்மி காரணமாக இறந்த பெற்றோர்களில் ஒருவரையோ அல்லது இருவரையுமே இழந்த குழந்தைகளுக்கு தொடர்ந்து தங்கள் பள்ளிகளில் தொடர்ந்து பயிலும் இலவசக் கட்டாயக் கல்வி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் அம்மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. **மேலும் இனி வரும் காலங்களில் தங்கள் பள்ளியில் தொடர்ந்து பயிலும் மேற்குறிப்பிட்டுள்ளவாறு கோவிட் -19 பெருந்தொற்று காரணமாக இறந்த பெற்றோர்களின் பிள்ளைகளின் விவரங்களை இணைப்பில் படிவத்தில் பூர்த்தி செய்து பெற்றோர்களின் இறப்புச் சான்று நகலுடன் கோவிட் -19 ல் பெருந்தொற்று காரணமாகவே இறந்துள்ளார் என்ற முழுவிவரங்களுடன் இரண்டு நகல்களில் இணைத்து 30.06.2022 மாலை 3 மணிக்குள் இவ்வலுவலக அ2 பிரிவில் ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மேற்காண்**

**தேதிக்குள் சமர்பிக்காத பள்ளிகளின் ஆவணங்கள் எக்காரணம் கொண்டும் பெற இயலாது என திட்டவட்டாக தெரிவிக்கப்படுகிறது**.

மேற்குறிப்பிட்டுள்ள கோவிட் -19 பெருந்தொற்று காரணமாக இறந்த பெற்றோர்களின் பிள்ளைகளின் ஆவணங்களும் அதற்குரிய அனைத்து சான்றுகளும் தங்கள் பள்ளிகளில் அம்மாணவருக்கென **தனியாக ( files & Registers ) பராமரிக்கப்பட வேண்டும்**. மேலும் ஆய்வு அலுவலர்கள் மற்றும் குழு மூலமாக தணிக்கை செய்யப்படும் போது அனைத்து ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர்கள் / தாளாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**

1. பிற்சேர்கை அரசாணை எண் 24
2. படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.